ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீவாநாசல மஹாமுநயே நம:

## அஷ்டதிக்கஜஸிம்ஹாஸனாதிபதிகள் சிறப்பு

பாராருமங்கை திருவேங்கடமுனி பட்டர்பிரான்
ஆராமம் சூழ்கோயில் கந்தாடை அண்ணண் எறும்பியப்பா
ஏராரும் அப்பிள்ளை அப்புள்ளார் ப்ரதிவாதி அண்ணனென்னும்
பேரார்ந்ததிக்கயம் சூழ்வர யோகியைச்சிந்தியுமே!!

## ஸ்ரீமத் பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர் மாமுனிகள் விஷயமாக அருளியுள்ள வாழித் திருநாமம்

சதுர்மறையினுபநிடத முடிவாய்
    நாரணன் தாளிணை வணங்க வருநாள்
ஸகலகுண ஸம்பன்னரெதிராசர் பாஷியம்
    சற்குருவர் போற்ற வருநாள்
மதிதவழும் மணமாட மதிலரங்கேசனார்
    மாறனுரை கேட்க வருநாள்
வரையாழி புவீமீதில் ஆரியர்கள் தாளிணையுள்
    வைத்தனரிரைஞ்ச வருநாள்
பதிகள் நூற்றெட்டிலும் ஸ்ரீ சைலமந்திரம்
    பாகவதர் போற்ற வருநாள்
பல்லாண்டு செப்பினபின் இன்னுமொரு
    நூற்றாண்டு பகருபவர் இறைஞ்சி வருநாள்
அதிமதுரகவிஞரோடேயதிராசர் சடகோபர்
    அடியிணைகள் மறவாத நாள்
அழகியசீர் மணவாள மாமுனி பரனவதாரம்
    செய்தருளிய நாள்

அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலத் திருநாளே

Azhvar emperumAnAr Jeeyar thiruvadigalE sharaNam
Jeeyar thiruvadigalE sharaNam